**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 161** **நாள் : 07.07.2025**

# கோடம்பாக்கம் மண்டலம், வார்டு 141க்குட்பட்ட பகுதிகளில் மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள் இன்று (07.07.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பெருநகர சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு 141க்குட்பட்ட பகுதிகளில் பூங்கா, சமுதாயக்கூடம், ஆரம்ப சுகாதார நிலையம், மற்றும் சென்னை மேல்நிலைப்பள்ளி ஆகியவற்றினை மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள் இன்று (07.07.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மாண்புமிகு மேயர் அவர்கள், கோடம்பாக்கம் மண்டலம், வார்டு 141க்குட்பட்ட சி.ஐ.டி. நகர், 3ஆவது பிரதான சாலையில் அமைந்துள்ள பூங்காவினைப் பார்வையிட்டு, பூங்காவினை புனரமைத்து மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளவும், பூங்காவில் மகளிர் உடற்பயிற்சிக் கூடம் அமைத்திடவும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். பின்னர், பூங்காவின் அருகில் உள்ள சமுதாய நலக்கூடத்தினைப் பார்வையிட்டு, இந்த இடத்தில் அதிக அளவில் மக்கள் பயன்பெறும் வகையில் புதிய சமுதாயக்கூடம் கட்டுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

சி.ஐ.டி. நகர், 4ஆவது பிரதான சாலையில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தினைப் பார்வையிட்டு, பொதுமக்களுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள், மருந்துகளின் இருப்பு உள்ளிட்டவற்றை ஆய்வு செய்தார். இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, சி.ஐ.டி. நகர், 4வது பிரதான சாலையில் அமைந்துள்ள சென்னை மேல்நிலைப்பள்ளியினைப் பார்வையிட்டு, உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இப்பள்ளியில் தேவையான பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார் .

இந்த ஆய்வுகளின்போது, மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு. எச்.ஆர். கௌஷிக், இ.ஆ.ப., மண்டலக் குழுத் தலைவர் திரு. எம். கிருஷ்ணமூர்த்தி, நியமனக் குழு உறுப்பினர் திரு.ராஜா அன்பழகன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**